# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 9 வயதுப் பிரிவு

- தேவார மனனப்போட்டி.

பண் : கொல்லி

**கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்**
**ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

பொழிப்புரை:

கெடில ஆற்றின் வடகரையில் விளங்கும் திருவதிகை என்னும் வீரட்டானத் திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே! யான் இப்பிறப்பில் என் அறிவு அறியப் பல கொடுஞ் செயல்களைச் செய்தேனாக எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறாகச் சூலைநோய், யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் குடலோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனைப் போல அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர். அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன்.

பண் : வியாழக்குறிஞ்சி

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர வருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

பொழிப்புரை:

மிகுதியாக வழங்கும் கொடையே தமக்கு அழகைத் தரும் என நினையும் வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் உறையும் இறைவன், உமையம்மை பெண்யானை வடிவுகொள்ள, தான் ஆண்யானையின் வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடிய வர்களின் இடர்களைக் கடியக் கணபதியைத் தோற்றுவித்தருளினான்.

- திருவாசக மனனப்போட்டி.

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து
        நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
        விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
        அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்
        உடையானே.

பொழிப்புரை:

நான் உன்னிடத்து அன்பு இல்லாதவனாய் இருந்தும் உன் அன்பர் போல் நடித்து முத்தி உலகத்தில் புகும் பொருட்டு விழைகின்றேன். ஆதலால் இனியாயினும் உன்னிடத்து அன்பு செய்யும்படி எனக்கு அருள் செய்யவேண்டும்.

உற்றாரை யான்வேண்டேன்
        ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
        கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
        கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
        கசிந்துருக வேண்டுவனே

பொழிப்புரை:

திருக்குற்றாலத்தில் விரும்பி வீற்றிருக்கின்ற, கூத்தப் பெருமானே! உறவினரை யான் விரும்புவேனல்லேன் வாழ்வதற்கு ஊரை விரும்புவேன் அல்லேன் புகழை விரும்புவேன் அல்லேன் கல்வியை மட்டும் கற்றவரை யான் விரும்பமாட்டேன். கற்க வேண்டிய கல்விகளும் இனி எனக்குப் போதும். உனது ஒலிக்கின்ற கழலையுடைய திருவடிக்கண் கன்றையுடைய பசுவினது மனத்தைப் போலக் கனிந்து உருகுவதை யான் உன்பால் விரும்புகின்றேன்.

- திருமந்திர மனனப்போட்டி.

வாழ்கவே வாழ்க னென் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம் அறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலம் இலாம் பாதமே.

பொழிப்புரை:

இதன் பொருள் வெளிப்படை.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உ ண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

பொழிப்புரை:

இதன் பொருள் வெளிப்படை.

- திருக்குறல் முதலாம் அதிகாரம்

- பேச்சுப்போட்டி “நவராத்திரி” சுயதேடல்.

அன்பார்ந்த பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.